

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இந்திய ஜனநாயக கட்சியின் கன்னியாகுமரி மாவட்ட தலைவர் ரீகன்பிரபு உட்பட 50 க்கும் மேற்பட்ட நபர்கள் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் வரவேற்பில், கழக துணை பொதுச் செயலாளர், மண்டல தேர்தல் பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மற்றும் பால்வளத்துறை அமைச்சர், கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணை செயலாளர் எம்.சோமு, கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### உச்சநீதிமன்றம் வழங்கிய மிகச் சரியான தீர்ப்பை – முறியடிக்கும் வகையில்

# குடியரசுத் தலைவர் வழியாக ஒன்றிய பி.ஜே.பி. - ஆர்.எஸ்.எஸ். அரசு முயற்சிக்கலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 20 –

மாநில அரசுகள் நிறைவேற்றும் மசோதாக்கள்மீது ஆளுநர்களோ, குடியரசுத் தலைவரோ முடிவு எடுக்க உச்சநீதிமன்றம் காலக்கெடு நிர்ணயித்து இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே வழங்கிய தீர்ப்பை முறியடிக்க குடியரசுத் தலைவர் வழியாக ஒன்றிய பி.ஜே.பி. அரசு முயற்சிக்கலாமா என்றும், உச்சநீதிமன்ற அமர்வின் தீர்ப்பின்மீது விசாரணை நடத்த, உயர்நீதி மன்ற அமர்வு முயற்சிப்பது எந்த வகையில் சரி என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு அரசு நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்கள்மீது சட்டப்படி ஒப்புதல் அளித்திருக்க வேண்டிய ஆளுநர் ஆர்.என்.ரவி, தொடர்ந்து – அரசமைப்புச் சட்டத்தின் 200 ஆவது பிரிவின் உணர்வுப்படி (Sprit) நடந்துகொள்ளாததோடு, தேவையற்று சில மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கும் அனுப்பி வைத்து, மக்களால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் தேர்தல் வாக்குறுதிகளைச் செயல்படுத்த விடாமல் குந்தகம் விளை வித்தது – நல்லெண்ணத்துடன் (Bona fide) உள்ள செயல் அல்ல என்பதால், சுமூகமான வகையில் ஆளுநரும் – முதலமைச்சரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கொடுத்த வாய்ப்புகளையும் முறையாகப் பயன் படுத்தித் தீர்வு காணாமல், விடாப்பிடியான நிலைப்பாட்டில் ஆளுநர் இருந்த காரணத்தால், 142 ஆவது பிரிவின் கீழ் உள்ள உச்சநீதிமன்றத்திற்குள்ள சிறப்பதி காரத்தைப் பயன்படுத்தி, ஆளுநர் ஒரு மாத கால அவகாசத்திலும், குடியர சுத் தலைவர் மூன்று மாத கால அவகாசத்திலும் மசோதாக்களுக்கு ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது – சரியான சட்ட நடவடிக்கையே!

**உச்சநீதிமன்ற அமர்வு அளித்த தீர்ப்பு சட்டப்படி சரியானதே!**

அரசமைப்புச் சட்டப் பிரிவு 142–இன்கீழ் தீர்ப்பளித்ததும், அது உடனே செயலாக்கத்திற்கு வந்ததும் ஓர் இக்கட்டான தேக்கத்திற்கு விடை கண்டது! அண்மையில் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்ற ஜஸ்டிஸ் பி.ஆர். கவாய் அவர்கள் குறி ப்பிட்டது போல், இந்திய அரசமைப்புச் சட்டம்தான் எல்லாவற்றையும்விட மிகமுக்கிய மானது – Only Con stitution is Supreme என்பது சரியான பார்வை. முகப்புரைப்படி, இறையாண்மை அதிகாரம் இறுதியில் மக்களிடமே உள்ளது; வேறு எந்த பெரும் பதவி யாளரிடமும் இருப்பதில்லை.

தமிழ்நாடு அரசு போட்ட வழக்கில் அரசமைப்புச் சட்டப்படிதான் ஜஸ்டிஸ் பர்திவாலா, ஜஸ்டிஸ் மகாதேவன் ஆகியோர் அமர்வு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பைத் தந்துள்ளது! குடியரசு துணைத் தலைவர் தவறாகக் குறிப்பிட்ட துபோல், உச்சநீதிமன்றம் நாடாளுமன்றத்தின் பணியைச் செய்யலாமா? என்று கேட்டது சரியல்ல.

**புதிதாக ஒன்றும் சட்டம் இயற்றவில்லை!**

உச்சநீதிமன்றம் அதனுடைய கடமையை Interpretation of Laws என்ற அதிகாரத்தின்படி சரியாக செயல்பட்டுள்ளது! புதிதாக சட்டம் இயற்றவில்லை; இருக்கின்ற 142 ஆவது பிரிவின்படியே அதில் உச்சநீதிமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள அதிகாரத்தைச் சரிவரப் பயன்படுத்தித்தான் தீர்ப்பு வழங்கி உள்ளது! தற்குமுன் இதே ஆளுநர் – பேரறிவாளன் வழக்கில் எடுத்த தவறான நிலைப்பாட்டினை, தலையில் 'குட்டு வைத்து' சொன்னதுபோல, மூன்று பேர் அமர்வு சுட்டிக்காட்டி, உடனடியாக விடுதலை யைச் செய்துவிடுவதற்குப் பயன்படுத்தியுள்ளது.

அரசமைப்புச் சட்டப்படி இத் தீர்ப்பினை ஏற்க மறுத்தால், அதற்குமேல் மறுசீராய்வுதான் உள்ள ஒரே சட்டவழி! (Review Petition). அதே நீதிபதிகள் அமர்வு விசாரிக்கும் – அதன்மீது தீர்ப்புக் கூறுவர் என்பது நடைமுறை.

**குடியரசுத் தலைவர் செயல்படாமல் தடுக்கலாமா?**

அதனைத் தவிர்த்து, கொல்லைப்புற வழியாக இந்த தீர்ப்பினைச் செயல்படவிடாமல் தடுக்க ஒரு குறுக்கு வழிபோலத்தான் குடியரசுத் தலைவர் 14 கேள்விகளைக் கேட்டுள்ளார். அவருக்கு அப்படிக் கேட்கும் உரிமை எப்படி உள்ளது என்பதற்குரிய விடை 143 பிரிவின்கீழ் உள்ளது.

142 ஆவது கூறுப்படி உள்ள அதன் சிறப்பதிகாரத்தினை உச்சநீதிமன்றம் பயன்படுத்தியது, ஒரு தீர்ப்பே தவிர, தனியே சட்டமியற்றிய செயல் அல்ல! 142 ஆவது கூறில் உள்ள சில முக்கிய சொற்கள், மிக முக்கியமாகச் சுட்டி க்காட்டப்பட வேண்டியதாகும். "doing complete Justice!" – அதன்படி அப்பிரிவு உச்சநீதிமன்றத்திற்கு மட்டுமே தரும் தனி சிறப்பதிகாரம் இது! எனவே, இதில் எந்த அதிகார மீறலும் நடைபெற்றுவிடவில்லை என்பது வெள்ளிடைமலை.

கூறு 142 (Article)பற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க இருவர் அமர்வு (ஜஸ்டிஸ் பரிதிவாலா, ஜஸ்டிஸ் மகாதேவன் அமர்வு) தந்த 414 பக்க விரிவான விளக்கமான தீர்ப்பில், பத்தி 426, பக்கம், 382 இல், "Article 142 of the Consti tution empowers this Court, in the exercise of its jurisdic tion to, pass such decree or make such order as is neces sary for doing complete jus tice in any cause or matter pending before it." தமிழாக்கம் வருமாறு:

அரசமைப்புச் சட்டப் பிரிவு 142 ஆனது இந்திய உச்சநீதிமன்றத்திற்குத் தனது ஆளுமைக்குள் செயல்பட சிறப்பு அதிகாரத்தை அளிக்கிறது. அந்த அதிகாரத்தினைக் கொண்டு உரிய தீர்ப்பினையோ, உத்தரவினையோ அளிப்பதன்மூலம் தம்முன் விசாரணையில் உள்ள எந்தவொரு நீதிமன்ற ஆணைக்கும், விசயத்திற் கும் நிலுவையில் உள்ள வழக்கிற்குமான முழுமை யான நீதியை வழங்கிட முடியும்.

தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக நேற்று (15.5.2025) சுட்டி க் காட்டியபடி, உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு மறைமுகமாக முட்டுக்கட்டை போல், செயல்படவிடாமல் தடுக்க முயலுவது அல்லாமல் வேறு என்ன?

**விசாரணை நடத்த துடிப்பதன் பின்னணி என்ன?**

குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களோ, மேலானவர்களோ அல்ல! இதுபோன்ற ஒரு செயல், சென்னை உயர்நீதிமன்றத்தின் விடுமுறைக் காலத்தில் அமைந்துள்ள நான்கு அமர்வுகளில், ஓர் அமர்வில் ஜஸ்டிஸ் ஜி. ஆர்.சாமிநாதன், ஜஸ்டிஸ் லட்சுமி நாராயணன் அமர்வு. அந்தக் குறிப்பிட்ட அமர்வு – துணைவேந்தர்கள் நியமன உரிமை, தமிழ்நாடு அரசுக்கு வழங்கும் சட்டத்தை உறுதி செய்து, அரசமைப்புச் சட்டம் 142 இன்படி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய சட்டத்தை எதிர்த்து ஒரு வழக்கைப் பட்டியலிடப்பட்டு, அதை அவசர வழக்காக – விடுமுறை காலத்தின் அமர்வு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சாமிநாதன் தலைமையில் எடுத்து விசாரிப்பதுடன், தமிழ்நாடு அரசு ஒரு வாரத்திற்குள் பதில் மனு (Counter) போட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது போல கூறுவது எந்த நோக்கத்தோடு என்ற கேள்வி எழத்தானே செய்கிறது!

இந்த வழக்கை இந்த அமர்வு விரைவுபடுத்த அதற்கென்ன அவசியம்? அதுவும் விடுமுறை காலத்தில்!

உச்சநீதிமன்றத் தீர்ப்பை, உயர்நீதிமன்ற அமர்வு தவறு என்று கூற முடியுமா, சட்டப்படி? இரண்டு வாரத்திற்குள் ஏதாவது தடையாணை போன்று வழங்கலாமா என்று கருதும் திட்டமோ என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது! ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நிகழ்வுகள் பலவற்றில் நீதிபதியாகவே பகிரங்கமாகப் பங்கேற்றுப் பேசுவது இவரது 'பெருமைகளில்' ஒன்று! உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு – அதுவும் விடுமுறைக் கால அமர்வு இப்படி விசாரித்து, ஏதாவது அவசர ஆணை பிறப்பிக்கத் துடிப்பது சட்டப்படி செல்லுமா? என்பதும் கேள்விக் குறி.

குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டு 14 கேள்விகளை முன்வைத்துள்ள நிலையில், அதே பிரச்சினையை மய்யப்படுத்தி உள்ள ஒரு வழக்கின் விசாரணைக்கு இப்போது உயர்நீதிமன்றம் மிகுந்த அவசரம் காட்டுவது, சட்டப்படியும், நியாயப்படியும் உகந்ததா? தமது உயர்நீதிமன்றத் தீர்ப்பு கள்பற்றி பொதுவெளியில் விமர் சிக்கப்பட்ட ஒருவர், இப்படி விசார ணைக்கு நிர்ப்ப ந்தப்படுத்தி, "ஒரு வாரத்திற்குள்" என்று தமிழ்நாடு அரசுக்கு கெடு வைத்ததன் நோக்கம் என்ன? இவற்றையெல்லாம் மக்கள் மன்றத்தில், நடுநிலையாளர்களும், ஜனநாயக, அரசமைப்புச் சட்டப் பாதுகாவலர்களும் கூர்ந்து கவனித்தே வருகின்றனர். விரைவில் 'பூனைக்குட்டி' மெல்ல மெல்ல வெளியே வரும் என்பது உறுதி!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், கொங்கரப்பட்டு கிராமத்திலிருந்து மணியம்பட்டு கிராமத்துக்கு செல்வதற்கு சங்கராபரணி ஆற்றில் 9. 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி,ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அன்புராஜ், உதய பொறியாளர் முருகானந்தம், வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ், ஒன்றிய கவுன்சிலர் பிரேம் சாந்தி, ஊராட்சி மன்ற தலைவர் காசியம்மாள் முனுசாமி உள்ளனர்.

# விடியலாட்சியை விளம்பிய அழகிய கண்காட்சி !



முதலமைச்சர் அவர்களது கொளத்தூர் தொகுதியிலோர் சாதனை விளக்கக் கண்காட்சியைக் காணும் வாய்ப்பு அமைந்தது. அடடா, செயலூக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போலொரு வீரிய கட்சியை காண்பதரிது எனும் கூற்றை அது மீண்டும் நிரூபித்தது.

அது, மயன் எழுப்பியதா அல்லது மாவட்டச் செயலாளர் எழுப்பியதா எனும்படி மனம் மயக்கியபடி நின்றிருந்தது.

நுழைவு வாசலே ஏதோ ஒரு தியேட்டருக்குள் நுழைவது போல முதலமைச்சரின் நான்காண்டு சாதனை போல - வெகு மிடுக்காக விரவி அமைந்திருந்தது. காரணம், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களது செயலாற்றல் எனில் அது மிகையாகாது.

***

உள்ளரங்கத்தின் தலைவாசலில் 12,909 திருக்கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம் உண்டாக்கியதை ஆவணப்படுத்தி இருந்தார்கள்.

**தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரும் தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த, முதல்வரின் அந்தச் சாதனை விளக்கக் கண்காட்சியை தனது நீண்ட அனுபவத்தின் வழியே பார்த்துப் பார்த்து பிரமாண்டமாக இழைத்து இழைத்துச் செதுக்கியிருந்தார் அறநிலையத்துறை அமைச்சர் !**

இன்னுயிர் காப்போம், பெண்குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், அரசாங்கம் ஏற்ற கல்விச் செலவு, பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தாய் சேய் நலப் பரிசுப் பெட்டகத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், மகப்பேறு நிதியுதவி, திருநங்கை ஓய்வூதியத் திட்டம் என எண்ணற்ற திட்டக் காட்சிகளை உள்ளடக்கியபடி இறுமாந்து இருந்தது அந்த அரங்கம்!



***

"நாடு போற்றும் நான்காண்டு; தொடரட்டும் பல்லாண்டு" எனும் தலைப்பில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கண்காட்சி அரங்கமானது, முதலமைச்சரது கொளத்தூர் தொகுதியின் 64 ஆவது வட்டத்தில் அமைந்திருந்தது.

மொத்தம் 14 வார்டுகளைக் கொண்ட முதல்வரது அந்தத் தொகுதியில் 64 ஆம் வார்டை மட்டும் ஏன் அமைச்சர் தேர்ந்தெடுத்தார் ஏன சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் சொன்னார்கள் ; அரங்கம் அமைக்கப்பட்டிருந்த அந்த மைதானத்துக்குப் பெயர் "அரிச்சந்திரா மைதானமாம் !"

"எந்தத் தருணத்திலும் உண்மையை மட்டுமே பேசுவேன். சத்தியத்தின் வழி மட்டுமே நிற்பேன்' எனச் சூளுரைத்தபடி சரித்திரத்தில் நிலைத்து நின்றவரல்லவா அரிச்சந்திரர்.



**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர் - இயக்குனர்

அவரது பெயர் கொண்ட மைதானத்தில் தமிழகத்துக்கு முதல்வர் ஆற்றிய பணிகளைக் காட்சிப்படுத்துவதே சாலத் தகும் என சொல்லாமல் சொல்லி விட்டார் போல அமைச்சர்.

***

மக்கள் சாரை சாரையாக வந்தவண்ணம் இருந்தார்கள்.

அரங்கத்தில் நிசப்தம் நிலவியது. அமைதியாக ஒவ்வொரு சாதனை விளக்க புகைப்படங்களையும் உள்வாங்கி ஏற்றுக் கொண்டபடியே நிறைவோடு மக்கள் நகர்ந்ததைக் கண்ணுற முடிந்தது.

வெயிலுக்கு இதமாக ஏ.சி. செய்யப்பட்டிருந்த அந்த அரங்கம், முதல்வரின் குளிர்ந்த மனதோடு போட்டி போட்டபடி அனைவரையும் வரவேற்றபடி இருந்தது.

வாசலில், 64 ஆவது வட்டக் கழகச் செயலாளர் மட்டுமல்ல; அருகாமை வட்டங்களின் மொத்த தி.மு.க. முன்னணியினரும் ஒன்றுகூடி இருந்தார்கள். அடுத்து செய்ய வேண்டியது என்ன என்பது குறித்து அமைச்சர் அடிக்கொரு முறை அழைத்து முடுக்கிக் கொண்டே இருக்க பம்பரமாகச் சுழன்றார்கள்.

இன்முகத்தோடு, வந்த மக்கள் அனைவரையும் வரவேற்று நலம்பாடியபடி இருந்தார்கள்.

தி.மு.க. என்பது கட்சி மட்டுமல்ல. அது ஒரு குடும்பம் எனும் சொலவடை ஒன்றுண்டு. அந்தக் காட்சியைத்தான் அங்கே காண முடிந்தது. குறிப்பாக பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்ததைக் காண முடிந்தது.

வயது முதிர்ந்த ஏழைத்தாய் ஒருவரை அணுகிக் கேட்டேன்.

கண்ணீர் மல்கியபடி சொன்னார், **"சார், எங்க குடும்பத்தில் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் எங்கள் முதலமைச்சரின் ஆட்சியில் பலன் அடைந்துள்ளோம். அந்த நன்றிக் கடனை என்றும் மறக்கமாட்டோம்."**

மக்கள் நலனை முன் வைத்துச் செயல்படும் ஆட்சியை வீழ்த்த எவரால்தான் இயலும் இங்கே?

அந்த அரங்கத்தில் 3 D அரங்கம் ஒன்றை அழகுற அமைத்திருந்தார்கள். அதில் 3 D கண்ணாடியோடு 7 நிமிடங்களுக்கு தரமான தொரு காட்சியைக் காணச் செய்தார்கள். முதல்வரும், துணை முதல்வரும் தோன்றிப் பேசும் Holo gram Video க்களையும் தனித்தனி அரங்கமாக அமைத்திருந்தார்கள். காட்சி முடிந்ததும் மக்கள் பலத்த கரவொலி எழுப்பி ஆனந்தித்தார்கள்.

ஆனால், தொழில் நுட்பம் அறிந்தவன் என்னும் முறையில் அதில் ஈடுபட்ட தொழில்நுட்பக் கலைஞர்கள் எனக்குப் பரிச்சயமானவர்கள், திறமைசாலிகள், அருமைத் தம்பிகள் என்பதால், "உங்களால் இதை இன்னமும் கூட சிறப்பாகச் செய்திருக்க முடியுமே ! ஏன் விட்டுக் கொடுத்தீர்கள்?" என உரிமையோடு கேட்டேன்.

அப்போதுதான் சொன்னார்கள், "அமைச்சர் திடுமென ஆணையிட்டு விட்டார். செய்து முடித்தாக வேண்டிய கட்டாயம் எங்களுக்கு. இயன்றவரை செய்து விட்டோம் சார்" என்றார்கள்.

**அவர்களிடம், "அவர் அப்படித்தான். ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால், அதுவும் முதல்வருக்காகச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் அசுர குணத்தோடு இறங்கிவிடுவார். அடுத்த கணமே அதன் ரிசல்ட்டை பார்க்கத் துடிப்பார். அடுத்த வாய்ப்பு கட்டாயம் உங்களுக்கு அமையும். அப்போது உங்கள் டீம் ஸ்ட்ரென்த்தை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டு மேலதிக அருமையோடு செய்து விடுங்கள். வாழ்த்துக்கள்!" என்றபடி நகர்ந்தேன்.**

ஆம், 5000 சதுர அடி கொண்ட அந்த அரிச்சந்திர கிரவுண்டில் வெறும் 52 மணி நேரத்தில் அப்படி ஒரு அரங்கத்தை கட்டி எழுப்பி நிற்க வைத்தது சாதனையாகும். அதனை சாத்தியமாக்கும் வல்லமை தி.மு.க. எனும் செயலூக்கம் கொண்ட கட்சிக்கே உண்டான தனிக்குணமாகும்.

**சுருங்கச் சொன்னால், நோக்கம் - வடிவாக்கம் - செயல்திறன் - வெற்றி என அனைத்திலும் முதலமைச்சரின் தனிக் குணத்தைக் கொண்டதாகவே அமைந்திருந்தது அந்தக் கண்காட்சி.**

இது ஒரு துவக்கம்தான். நாடு நகரமெங்கும் இந்தக் கண்காட்சி தொடரும் என்றார்கள்.

தொடரட்டும்.

தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது மக்கள் நலனை மட்டுமே முன் வைத்து ஓயாது உழைக்கும் முதலமைச்சருக்கு அது அருமருந்தாக அமையட்டும்.

**பேரறிஞர் அண்ணா சொன்னது போல "தீ பரவட்டும் !"** ●